பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 40
கதிர் : 144
சனிக்கிழமை
19 ஏப்ரல் 2025
சித்திரை 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



## டெங்கு 14,678!

கொழும்பு, ஏப். 19
நாட்டில் இதுவரை 14 ஆயிரத்து 678 பேர் டெங்குத் தொற்றுக்கு ஆட்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்

11



கவனக் குறைவால்

## டிப்பர் சில்லுக்குள் அகப்பட்டு பச்சிளம் குழந்தை உயிரிழப்பு

அம்பாள்குளத்தில் சோகம்

கிளிநொச்சி, ஏப். 19
கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில், தந்தை செலுத்திய டிப்பரின் சில்லுக்குள் அகப்பட்ட குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

11

திஸ்ஸ விகாரை தொடர்பில்

# ஜனாதிபதி அநுரவின் கருத்துகளே இனவாதம்!

கஜேந்திரகுமார் எம்.பி. பதிலடி



**யாழ்ப்பாணம், ஏப்ரல் 19**
**தையிட்டி திஸ்ஸ விகாரையை வைத்து ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ள கருத்துகள்தான் இனவாதமாக அமைந்துள்ளன. இனவாதப் பிக்குமாரைக் காப்பாற்றுவதற்காகவே, அவர் எங்களை இனவாதிகள் எனக் கூறியுள்ளார் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

04

## அன்னை பூபதியை அஞ்சலிக்க மட்டக்களப்பில் தடையுத்தரவு!

மட்டக்களப்பு, ஏப்.19
அன்னை பூபதியின் 37 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று நினைவுகூரப்படவுள்ளநிலையில், நினைவேந்தல் நிகழ்வுகளுக்குப் பொலிஸார் நீதிமன்றத் தடையுத்தரவு பெற்றுள்ளனர்.
மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்

11

## இலங்கையில் மீண்டும் எலிக்காய்ச்சல் அபாயம்

விரிவு பக்:- 11

## இந்தியாவுக்குப் பாலம்; பின்வாங்கியது இலங்கை

கொழும்பு ஊடகமொன்று தகவல்

கொழும்பு, ஏப். 19
இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பாலம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று அரச தரப்பு தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைக்கும் எண்ணம் தற்போதில்லை என்ற தனது நிலைப்பாட்டை, 2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமே இலங்கை அரசாங்கம் இந்தியா

11

வவுனியா – வேலங்குளம் பகுதியில்

## காட்டு யானைகள் தொடர் அட்டூழியம்

வவுனியா, ஏப்.19
வவுனியா வேலங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காட்டு யானைகள் தொடர்ச்சியாக அட்டூழியத்தில் ஈடுபட்டுவருகின்றன என்றும், இதனால் தாம் வாழ்வதற்கு அச்சப்பட

11

## பிள்ளையானின் சாரதி சி.ஐ.டி.யால் கைது!

மட்டக்களப்பு, ஏப். 19
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையானின் சாரதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

11



பூச்சந்தி பூராணி

'அன்னை பூபதியை நினைவேந்தினால் பூகம்பம் வந்திடும் எண்டு பயப்பிடுகினமோ?'

ஈஸ்டர் தாக்குதலில் இறந்தோர்

## வேத சாட்சிகள்!

வத்திக்கான் வழங்கியது அங்கீகாரம்
நாளைமறுதினம் அறிவிப்பு வெளிவரும்



கொழும்பு, ஏப். 19
2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்தஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் வேத சாட்சிகளாக அறிவிக்கப்படவுள்ளனர்.
தாக்குதல்களில் கொல்லப்பட்ட அனைவரையும் வேதசாட்சி

11

## பிள்ளையான் என்பவர் தேசிய நாயகனல்லர்!

அது மிகைப்படுத்தப்பட்ட கருத்து
பொதுஜன பெரமுன தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 19
பிள்ளையானை, 'தேசிய நாயகன்' என்றும், 'தேசப்பற்றாளர்' என்றும் உதய கம்மன்பில கூறியுள்ளார். அவருடைய கூற்றுகளுடன் நாம் உடன்படவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.
பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்

11

மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 18.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4047 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 30 70 71 77 |
| விசேட எழுத்து | G |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 18.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1114 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 17 37 39 52 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 18.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 073 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 4 5 3 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 18.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2153 |
| ஆங்கில எழுத்து | O |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 01 10 29 56 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 18.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5805 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 7 4 9 3 4 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 18.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1835 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 09 13 15 34 |
| விசேட எழுத்து | V |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 18.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0380 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 9 3 4 7 |

# புலிகளைத் திருப்திப்படுத்தவே பிள்ளையானுக்குத் தண்டனை

## உதய கம்மன்பில கண்டுபிடிப்பு

**கொழும்பு, ஏப்.19**

**கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் பிள்ளையானைத் தண்டித்து, புலிகளைத் திருப்திப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புலிகள் அமைப்பில் இருந்து 6 ஆயிரம் பேருடன் வெளியேறி படையினருக்கு பிள்ளையான் ஒத்துழைப்பு வழங்கி இருக்காது விட்டால், சிலவேளை போரை முடிவுக்குக் கொண்டுவரமுடியாமல்கூடப் போய் இருக்கலாம்.

அப்படியான நபர்களுக்கு நாம் நன்றிக்கடன் செலுத்த வேண்டும். தவறுகளுக்குத் தண்டனை வழங்குவதாக இருந்தால் அனைவருக்கும் அது வழங்கப்பட வேண்டும். புலிகள் அமைப்பில் இருந்தவர்கள், ஆதரவு வழங்கியவர்கள் இன்று சுதந்திரமாக இருக்கும்போது புலிகளை எதிர்த்துப் போராடியவர் மட்டும் ஏன் கைது செய்யப்படுகின்றார்? ஜே.வி.பியினரும் முன்பு தீவிரவாதச்செயல்களில் ஈடுபட்டனர். அப்படியானால் அவர்களுக்கும் தண்டனை வழங்கப்படவேண்டும். புலிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவே பிள்ளையானை அரசாங்கம் தண்டிக்க முற்படுகின்றது. புலிகளுக்கு எதிராகப் போராடியவர், இன்று புலிகளிடம் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளார். எது எப்படி இருந்தாலும் புலிகளைத் திருப்திப்படுத்துவதற்காக, பிள்ளையானைத் தண்டிப்பதற்கு இந்த அரசாங்கத்துக்கு நாம் இடமளிக்கமாட்டோம் - என்றார். (எ-44)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | வெற்றி வாரம் |
| 18.04.2025 | வெள்ளிக்கிழமை | | 0513 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | | |
| C | 7 8 2 2 9 1 | | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.04.2025 | வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2779 | X | 23 46 62 72 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.04.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 16 22 24 40 | 4940 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 18.04.2025 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0664 | 01 30 36 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.04.2025 | வெள்ளிக்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 20 22 32 55 | 4491 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 18.04.2025 | வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 25 | 08 09 14 70 | 1955 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.04.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 20 31 49 55 | 2605 |

# பிள்ளையானின் கைதால் ராஜபக்சக்கள் நடுக்கம்!

## ஜயகொட தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.19

கடத்தல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் கைதுசெய்யப்பட்டுள்ளமை ராஜபக்சக்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் ராஜபக்சக்களின் முகவராக பிள்ளையானுக்காககம்மன்பிலமுன்னிலையாகியுள்ளார் என்று முன்னிலை சோசலிஷக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் முன்னிலை சோஷலிசக் கட்சியின் கல்விச் செயலாளரான புபுது ஜயகொட தெரிவித்துள்ளதாவது

கடத்தல் மற்றும் காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுடன் ராஜபக்ச ஆட்சிக்கு தொடர்புள்ளது என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தோம். எமது கட்சித் தோழர்களான லலித், குகன் ஆகியோர் கடத்தி காணாலாக்கப்பட்ட சம்பவத்துடனும் ராஜபக்சக்களுக் குத் தொடர்புள்ளது.

இது தற்போது நிரூபனமாகிவருகின்றது. கடத்தல் விவகாரம் தொடர்பிலேயே பிள்ளையான் கைதுசெய்யப்பட்டுள்ளார். இது ராஜபக்சக்களுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ராஜபக்சக்களின் முகவராகவே பிள்ளையானின் சட்டத்தரணியான கம்மன்பில செயற்படுகின்றார். ராஜபக்ச மற்றும் பிள்ளையானுக்கிடையிலான தொடர்பாடலை ஏற்படுத்துவதே கம்மன்பிலவின் பணியாகும்.

உதய கம்மன்பில அண்மைக்காலங்களில் சட்டத்தரணியாகப் பெரிதாகச் செயற்படவில்லை. அப்படி இருக்கையில் தனது சட்டத்தரணியாக பிள்ளையான் அவரைத் தேர்வு செய்ததன் நோக்கம் தெளிவாகின்றது. ரணில் விக்கிரமசிங்கவும் பிள்ளையானுடன் கதைப்பதற்கு அனுமதி கோரியுள்ளார்- என்றார். (எ-44)

# போக்குவரத்து விதிமீறல் I, 24,000

கொழும்பு,ஏப். 19

இந்த மாதம் முதலாம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஒரு லட்சத்து 24 ஆயிரம் போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பான குற்றங்களுக்கு எதிராக வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் கீழ் 9 ஆயிரத்து 920 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவர்களில் பெரும்பாலானோர் மதுபோதையில் மோட்டார்சைக்கிள் பயணம் செய்தவர்களாவர். 18ஆயிரத்து 25 பேருக்கு எதிராக வீதி ஒழுங்கை மீறிய குற்றச்சாட்டின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் கீழ் 9ஆயிரத்து 580 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும். அதிகரித்த வேகம் காரணமாக 2 ஆயிரத்து 148 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் பயணம் செய்ததாக 11ஆயிரத்து 723 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து பொலிஸார் மேலும் தெரிவித்தனர் .(ச-22,6)



# மன்னாரில் ஜனாதிபதியின் உரை அப்பட்டமான தேர்தல் விதிமீறல்!

## சுமந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப் .19

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நேற்றுமுன்தினம் மன்னாரில் ஆற்றிய தேர்தல் பரப்புரை உரை தேர்தல் விதிமுறை மீறல் என இலங்கைத் தமிழரசுக் கட்சி குற்றஞ்சுமத்தியுள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்,

மன்னார் நகரசபைக்குத் தமது தேசிய மக்கள் சக்தியினரை மக்கள் தெரிவுசெய்தால், அந்த நிர்வாகத்தின் திட்டங்களுக்கு கண்ணை மூடிக்கொண்டு நாம் அங்கீகாரம் வழங்கி நிதியொதுக்கீடு செய்வோம். வேறு தரப்பிடம் நிர்வாகம் போனால் அவர்களின் திட்டங்கள் குறித்து ஒன்றுக்குப் பத்துத் தடவை பரிசீலித்தே முடிவெடுப்போம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றியுள்ளார்.

இந்த உரை அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறலாகும். மக்களுக்கு இலஞ்சம் கொடுத்து வாக்குத் திரட்டும் சமயோசித பாணியே இந்த உரை. இதற்கு எதிராக நாம் தேர்தல் ஆணையகத்திடம் உத்தியோகபூர்வமாக முறையிடவுள்ளோம்- என்றார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையான், கருணாவால் எவ்விதப் பயனும் இல்லை!

## சரத் பொன்சேகா கூறுகின்றார்

**கொழும்பு, ஏப்.19**

**பிரபாகரனின் இருப்பிடம் தொடர்பான தகவல்களை கருணா அம்மான் எமக்கு வழங்கவில்லை. அதேபோல கருணா, பிள்ளையான் ஆகியோர் உளவுத் தகவல்களையும் வழங்கவில்லை என்று இறுதிக்கட்டப்போரின் போது இராணுவத் தளபதியாகச் செயற்பட்ட பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றில், போரை முடிப்பதற்கு கருணா, பிள்ளையான் ஆகியோர் வழங்கிய தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கருணா அம்மானிடம் 150 பேர் இருந்தனர். அவர்களில் 80 பேர் சிறுவர் போராளிகள். எஞ்சியோரில் சிலர் கொழும்பில் இருந்தனர். அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கினோம். புலிகள் அமைப்பில் இருந்து, வடக்கில் படையினருக்கு எதிராக சண்டை இட்டிருந்தாலும், பிரபாகரன் எங்கிருந்தார் என்ற தகவலைக்கூட கருணா எமக்கு வழங்கவில்லை. நாம் தலையைத் தூக்கும்போது எமக்கு அருகில் பயங்கரவாதிகள் இருந்தனர். எனவே, உளவுத் தகவல்கள் அப்போது தேவைப்பட்டிருக்கவில்லை.

கஜுவத்தை என்ற இடத்தில் மாத்திரமே கருணாவின் படை பயன்படுத்தப்பட்டது.

அதுவும் பிரதேசம் தொடர்பில் அனுபவம் இருக்கும் என்பதால் அவர்கள் பயன்படுத்தப்பட்டனர். அப்போதும் தாக்குதலை முழுமைப்படுத்தாமல் காட்டுக்குள் தப்பிவந்துவிட்டனர். புலிகள் தாக்குதல் நடத்தும்போது டயஸ்போராக்கள் சிலர் கொண்டாட்டங்களில் ஈடுபடுவார்கள். புலிகள் அமைப்புடன் மோதினாலும், புலிகள் தமிழர்களின் இராணுவம் என்ற உணர்வு கருணாவிடமும் பிள்ளையானிடமும் இருந்தது. இராணுவ முகாம்களுக்குள் கருணாவின் ஆள்களை நாம் வைத்திருக்கவில்லை என்பதை பொறுப்புடன் கூறுகின்றேன் - என்றார். (எ-இ)

## தேர்தல் அதிகாரிகளுக்கு அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், ஏப் .19

யாழ். தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்குத் தம்மை அடையாளப்படுத்தும் வகையில் விசேட அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. தேர்தல் விதிமீறல் சார்ந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் சம்பவ இடத்துக்கு விசாரணை செய்யச் செல்லும்போது தம்மை அடையாளப்படுத்தும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-125)

## சிறுதானியச்செய்கை கால்நடைகளால் அழிவு

யாழ்ப்பாணம், ஏப்.19

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள வயல்வெளிகளில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியச் செய்கை கால்நடைகளால் பெருமளவில் அழிவுற்றுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மறவன்புலவு, தச்சன் தோப்பு, மறவன்புலவு வள்ளியம்மை கோவிலடி, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளிலுள்ள நிலங்களில் கால்நடைகள் வயலில் இறங்கி சிறுதானியப் பயிர்களை அழித்துவருகின்றன.

எனவே இவ்விடயம் தொடர்பாக விவசாய கமநலசேவை நிலைய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-33131)

## சட்டத்தரணிகளை சோதனையிடுதல் ஆராயப்படுகிறது

கொழும்பு, ஏப். 19

தெரிவுசெய்யப்பட்ட சில நீதிமன்றங்களில் சட்டத்தரணிகளைச் சோதனையிடுவது பற்றி நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கும் சட்டத்தரணிகள் சங்கத்துக்குமிடையே கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. சட்டத்தரணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாதவகையில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-25,6)



## மணற்காட்டில் சவுக்குவெட்டிய இருவர் கைது; மூவர் தப்பிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ்ப்பாணம் மணற்காட்டுப் பகுதியில் சவுக்குவனத்தில் மரங்களை வெட்டி விறகுகளாக்கிய இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் மூவர் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வனவளத் திணைக்கள அதிகாரிகள் குழுவினரும், நெல்லியடி விசேட அதிரடிப்படையினரும் இணைந்து இந்தச் சட்டவிரோத செயலைத் தடுத்தனர். இதன்போது விறகு ஏற்றுவதற்குப் பயன்படுத்திய 5 துவிச்சக்கரவண்டிகள் மீட்கப்பட்டன.

சந்தேகநபர்களை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது கடுமையான எச்சரிக்கையின் அடிப்படையில் பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார். தப்பிச் சென்ற மூவர் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனஎன்றும் திணைக்களத்தினர் தெரி[illegible] (ச-125)

## காதலன் இறந்த சோகத்தில் காதலியும் உயிர்மாய்ப்பு

### தென்மராட்சியில் சோகம்

யாழ்ப்பாணம், ஏப் .19

மிருசுவில் தெற்குப் பகுதியில் தவறான முடிவெடுத்து யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. மிருசுவிலைச் சேர்ந்த 18 வயதான யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இதேவேளை வரணிப்பகுதியில் சிட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள தும்புருவிக்குளத்துக்கு குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்திருந்தார்.

இந்தநிலையில் உயிரிழந்த இருவரும் காதலர்கள் எனவும் இளைஞன் இறந்த செய்தி அறிந்தே யுவதி தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-28,66,159,9)




நோகாமல் நொங்கு குடிக்கிறதெண்டால் எல்லாருக்கும் பிடிக்கும்தானே. இதுக்கு என்.ஜீ.ஓ.க்கள் (அரச சார்பற்ற நிறுவனாங்கள்) மட்டும் விதிவிலக்கில்லைத்தானே. இஞ்சயுள்ள லோக்கல் என்.ஜி.ஓ.க்கள் எல்லாமே சனத்துக்கு அதைச் செய்யப்போறம், இதைச் செய்யப்போறம் எண்டு நிறையப் புரஜெக்ட் செய்வினம். ஆனால் அதால என்ன மாற்றம் நடந்திருக்கு எண்டு பார்த்தால், ஒண்டுமே நடந்திருக்காது. ஆனால் இவையளின்ர அறிக்கையின்படி பார்த்தால் தாங்கள் எடுத்த பிரச்சினையள் எல்லாமே தீர்க்கப்பட்டமாதிரித்தான் இருக்கும். சிறுவர் துஷ்பிரயோகம், சின்னப்பிள்ளையள் வேலைக்குப் போறது, பள்ளிக்கூடத்தால பிள்ளையள் இடையில நிக்கிறது, குடும்பச் சண்டையள், குடிப்பிரச்சினை, பிழையான முடிவெடுத்து உயிரை மாய்க்கிறது, சின்னவயதிலேயே கலியாணம் கட்டுறது, பாலியல் துஷ்பிரயோகம், போதைப்பாவனை எண்டு எல்லாமே கூடிக் கொண்டுதான் போகுதே தவிர ஒண்டும் குறைஞ்சபாடில்லை. அப்ப இந்த என்.ஜீ.ஓ.க்கள் ஆருக்காக உந்தப் புரஜெக்டுகளைச் செய்யினம் ? எல்லாம் தங்களுக்காகத்தான். அப்பிடியொரு என்.ஜீ.ஓ.வில நடக்கிற சில விசயங்களைக் கேட்டால் இப்பிடியும் காசு உழைக்கலாமோ எண்டு மூக்கில விரலை வைப்பீங்கள்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு கீழ பதிவு செய்யப்பட்ட இந்தத் தொண்டு நிறுவனத்தை, உளநலம் சம்பந்தப்பட்ட பிரச்சினையளைத் தீர்க்கிறதுக்காக உருவாக்கினவை. சனத்துக்கு உளநலம் நல்லமாதிரி வர வேலை செய்யினமோ இல்லையோ, தாங்கள் நல்லா இருக்கிறதுக்குரிய எல்லாமே வடிவாச் செய்யினம். இவையின்ர புரொஜெக்டில 'கலியாணம் கட்டப்போறவைக்கு கவுன்சிலிங்' குடுக்கிறதும் ஒண்டு. உளநலம் சம்பந்தமா படிச்சு, அனுபமும், ஆற்றலும் உள்ள பொருத்தமான ஆக்களை வைச்சுத்தான் இந்தக் கவுன்சிலிங் குடுக்கவேணும். ஆனால் அப்பிடி பொருத்தமான ஆக்களைப் பிடிச்சால் அவைக்கு கனக்கக் காசு குடுக்கவேண்டி வந்திடுமெல்லோ. அதால, தங்களுக்கு நெருக்கமான சிலரை மட்டும் வளவாளராப் போட்டு, அந்த கவுன்சிலிங்கை குடுப்பினம். ஆனால் கணக்குக்காட்டேக்க மட்டும், எக்கச்சக்கமாக் காட்டி, வளவாளருக்குக் குடுத்தது போக மிச்சத்தை அந்தப் புரஜெக்ட்டுக்குப் பொறுப்பா இருக்கிறவ தங்கட பொக்கெற்றுக்க போட்டுடுவினமாம். கொஞ்சநஞ்சக் காசில்லை, லட்சக்கணக்கில இப்பிடி பொக்கற்மணி எடுத்திருக்கினம்.

அதைவிட சுண்டங்காய் காற்பணம், சுமைகூலி முக்கால்பணம் எண்டமாதிரி, புரஜெக்ட்டுக்கு வாற காசில அறுபது வீதமான காசை இந்த என்.ஜீ.ஓ. தன்ர நிர்வாகச் செலவுக்கு எடுத்துப்போட்டு ,மிச்ச நாப்பது வீதத்தைத்தான் புரஜெக்ட் செலவுக்கு பாவிக்கிறவை. அந்த நாப்பது வீதத்திலையும் திட்டத்துக்குப் பொறுப்பா இருக்கிறவை தங்கட பொக்கெற்றுக்குள்ள போட்ட மிச்சக்காசுதான் உண்மையான செலவாம். இந்த ஊழல் மோசடியளை அங்க வேலைசெய்யிற கொஞ்சப்பேர் கண்டுபிடிச்சு, அதைப்பற்றி மேல் மட்டத்திட்ட கேள்வி கேட்டிருக்கினம். உடனேயே 'கூகிள் ட்ரைவில டேட்டா ஏத்தேல, கூழ்ப்பானையில உப்புப்போடேலை' எண்டமாதிரி உப்புச்சப்பில்லாத சாட்டுகளைச் சொல்லி வேலையை விட்டே நிப்பாட்டிப் போட்டினமாம். இப்ப பாதிக்கப்பட்ட ஆக்கள் அங்க நடந்த ஊழல்களையெல்லாம் ஆதாரங்களோட வெளியில சொல்ல ஆயத்தப்படுத்துகினம். பாப்பம், இன்னும் என்னென்ன வண்டவாளங்கள் வரப்போகுதெண்டு.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் கலந்துகொண்ட ஜனாதிபதி அநுர, 'திஸ்ஸ விகாரையை மையப்படுத்தி, வடக்கிலும் தெற்கிலும் அரசியல் செய்கின்றனர். விகாரையை அடிப்படையாகக் கொண்ட அரசியலை நீக்கினால், இலகுவில் இதற்குத் தீர்வு காணலாம்' என்று கூறியிருந் தார்.

ஜனாதிபதியின் கருத்துத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த இரண்டு வருட காலமாக நாங்கள் தையிட்டியில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணையாக நின்று அவர்களின் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் விடுவிப்புக்காகப் போராடிவருகின்றோம். இந்தநிலையில் ஆறுமாதத்துக்கு முன்னர் ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி. அரசாங்கத்தைச் சேர்ந்த ஜனாதிபதி அநுரகுமார தனது உரையில், 'பாதிக்கப்பட்ட மக்கள் வித்தியாசமான நிலைப்பாட்டில் உள்ளனர். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மாத்திரம்தான் பிரச்சினைக்குரிய நிலைப்பாட்டை எடுக்கின்றது' என்ற கருத்துத் தொனிப்பட உரையாற்றியுள்ளார்.

அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வருகைதந்த காலப்பகுதி முதல் தற்போதுவரை தமிழ்மக்கள் மத்தியில் உரையாற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தாங்கள் இனவாதத்துக்கு இடமளிக்க மாட்டோம் என்று கூறிவருகின்றார். ஆனால், அவருடைய செயற்பாடுகள் அனைத்தும் இனவாதத்தின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளை, அவர்களுக்குக் கிடைக்கும் வகையில் போராடுவது எவ்வாறு இனவாதமாகும். எம்மைப்பொறுத்தவரை, இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த இனவாதிகளின் செயற்பாட்டுக்கும் ஜனாதிபதி அநுரவின் செயற்பாட்டுக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை.

வடக்கு கிழக்கில் சட்டவிரோதமாகக் கட்டப்படுகின்ற ஒவ்வொரு விகாரையும், ஆக்கிரமிப்பும் இராணுவத்தால்தான் முன்னெடுக்கப்படுகின்றது.

பிக்குமார்களின் பிரசன்னத்துடன் இடம்பெறும் இத்தகைய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது இராணுவமே. இதுவும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே. ஏற்கனவே இராணுவம் எமது மண்ணில் இனப்படுகொலை செய்தது, போர்க்குற்றங்களை முன்னெடுத்தது, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை மேற்கொண்டது. ஆகவே, மக்கள் இராணுவத்தினர் மீது பயபீதியில் உள்ள நிலையில் சட்டவிரோதமான இராணுவத்தின் செயற்பாடுகளைத் தமிழ்மக்கள் எதிர்க்க முன்வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையில்தான் தற்போதைய அரசாங்கமும் செயற்பட்டுவருகின்றது. இதுதான் உண்மை - என்றார்.

(அ-ம-66-26-125-20)



புதுவருடத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு கைவிசேடம் வழங்கும் நிகழ்வு, பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. (ச-25,9)

## வீதியோட்டம் இன்று

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் வீதியோட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

15 வயதுக்குட்பட்ட ஆண்,பெண் போட்டியாளர்களுக்கு 7 கிலோ மீற்றர் தூரமும், 15 வயதுக்கு மேற்பட்ட போட்டியாளர்களுக்கு 21 கிலோ மீற்றர் தூரமும் வீதியோட்டம் இடம்பெறவுள்ளது.

பங்குபற்றும் போட்டியாளர்கள் மருத்துவச் சான்றிதழ் எடுத்துவருதல் அவசியமாகும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-33-27)


# சிவனொளிபாதமலைக்கு தரிசன யாத்திரை

யாழ்ப்பாணம், ஏப்.19

இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர்சபையின் ஏற்பாட்டில் சிவனொளிபாதமலை நோக்கிய தரிசன யாத்திரை அடுத்த மாதம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

குறித்த தரிசன யாத்திரையில் பங்கேற்க விரும்பும் அடியவர்கள் தங்கள் முழுப் பெயர், முகவரி, அடையாள இலக்கம் மற்றும் வட்ஸ்அப் இலக்கம் ஆகிய விவரங்களை 0779236552 எனும் வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு இலங்கை முதலுதவிச் சங்க இந்துசமயத் தொண்டர்சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் கேட்டுள்ளார். (ச-33-66)

# மரண அறிவித்தல்



தோற்றம் 22.05.1951 மறைவு 17.04.2025

## சண்முகம் தவராசா

நல்லூர் அரசடியை பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தவராசா அவர்கள் நேற்று முன்தினம் (17.04.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சண்முகம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், றெஜினாவின் அன்புக்கணவரும், கஜித்தா (பி.வை சங்கானை ), றாஜிக்காந் (பிரான்ஸ்), சுபேக்கா, ரமேஷ் (பிரான்ஸ்), ரிலைக்சன், நிரேசன் (பிரான்ஸ்), சலோமி ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திரகுமார் (உள்ளூராட்சி அமைச்சு வட மாகாணம் ) நந்தகுமார், நிரோஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சின்னத்துரை, பாக்கியவதி ஆகியோரின் அன்பு மருமகனும், அருந்தவராசா (பிரான்ஸ்), சந்திரன், ரஞ்சினி, லோகராணி, கிருஷ்ணா ஆகியோரின் அன்பு மைத்துனரும், உதயமலர், விமலாதேவி, ரவிச்சந்திரன், சிறிதரன், சுகுணதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற றோகினி,வனிதா (நல்லூர்) ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற செல்வராசா, அற்புத ராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், துர்க்கா, ஜயிந்தன், விபில், யுகசுதன், தர்ஷா, தாட்சா ஆகியோரின் அன்பு மாமானாரும், கேமா, பானுஷன்,காவியா, நித்யா, மதுராங்கி ஆகியோரின் மாமனாரும், பிரசாந், நிஷான், வைஸ்ணவி, நிவேதா, பவிசன், றெக்ஸ்மன்,றெக்ஸ்மி, கேசிகா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் மதுஷிகன், சங்கவி, தர்மிகள் ஆகியோரின் அன்பு மிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உடுவிலில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூத்வுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
மருமகன் :077 861 2333
மகன்: 076 569 5967

(CS/58013) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

மனித சுதந்திரத்தைப் பறித்து தன்னடக்கத்தையும் ஊக்கத்தையும் உண்டாக்கமுடியாது.

—ஆபிரகாம் லிங்கன்—


# புனித வாரமும் காட்டிக்கொடுப்பும்

உயிர்த்தஞாயிறுத்தாக்குதலுடன்தொடர்புடைய பிரதான குற்றவாளிகளும், சூத்திரதாரிகளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் காட்டிக்கொடுக்கப்படுவார்களா? என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருக்கின்றது. ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகள் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் வெளிப்படுத்தப்படுவார்கள் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்த நிலையிலேயே, இந்த விடயத்தில் எதிர்பார்ப்புகளும் பரபரப்புகளும் நிறைந்துள்ளன. அத்துடன், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறுத்தாக்குதலின் 6ஆவது நினைவுநாள் நாளைமறுதினம் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில், ஒட்டுமொத்த இலங்கையர்களின் உணர்வுகளுடனும் இரண்டறக் கலந்திட்ட விடயமாகவும் அண்மைய நாள்கள் அமைந்திருக்கின்றன என்றால் அதை மறுப்பதற்கில்லை.

ஒட்டுமொத்த இலங்கையையும் உலுக்கியெடுத்த ஈஸ்டர் தாக்குதலின் பின்னணி மிகவும் கொடியது. இந்தத் தாக்குதல்கள் காரணமாக, ஓர் இனக்குழுமம் திட்டமிட்டு வஞ்சிக்கப்பட்டது. தேவையற்ற கறைகளும், களங்கங்களும் அந்த இனத்தின் மீது சுமத்தப்பட்டன. இனங்களுக்கு இடையில் இடைவெளிகளும், விரிசல்களும் வேரூன்றிப்போயுள்ள இலங்கையில், அந்த இடைவெளிகளை இன்னுமின்னும் அதிகரிக்கும் படியான நடவடிக்கைகள், ஆறாக் காயங்களாக மேற்கொள்ளப்பட்டன. ஆதலால், ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியையும், அதன் காரணகர்த்தாக்களையும் வெளிப்படுத்துவதானது, குற்றவாளிகளை இனங்காண்பதோடு, இனங்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த இடைவெளியைக் குறைக்கவும் உதவும்.


உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் வழக்கின் பிரதான சூத்திரதாரிகளில் ஒருவராகப் பிள்ளையான் ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தற்போது தடுத்துவைத்து விசாரிக்கப்படும் அவரிடம் இருந்து புதிய தகவல்கள் வெளிப்படலாம் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருக்கையில், பிள்ளையானை மையப்படுத்திச்செயற்பட்ட பெருந்தலைகள்ஒருவித பதற்றத்துக்குள்தள்ளப்பட்டுள்ளனர் என்பது அவதானிப்பு. ஆதலால், இந்தக் 'காட்டிக்கொடுப்பு' நிச்சயம் அநுர அரசாங்கத்துக்கு இலகுவாக இருக்கப்போவதில்லை. அழுத்தங்கள், சவால்கள், மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் இவற்றையெல்லாம் தாண்டித்தான் உண்மையை வெளிப்படுத்தும் முயற்சிகளை அநுர அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

புனித வாரத்தில் காட்டிக்கொடுப்பென்பது புதிதல்ல. அன்று வெறும் 30 வெள்ளிக்காக இறைமகன் இயேசுக்கிறிஸ்து காட்டிக்கொடுக்கப்பட்டார். அவர் காட்டிக் கொடுக்கப்பட்டதால் அதிகார வர்க்கமான தலைமைச்சங்கத்தினரும், பாவிகளும் ஆர்ப்பரித்தனர். ஆனால், அநுர அரசாங்கம் மேற்கொள்ளப்போகும் காட்டிக்கொடுப்பு வித்தியாசமானது. இங்கே காட்டிக்கொடுக்கப்போவது பாவிகளைத்தான். ஆர்ப்பரிக்கப்போவது அப்பாவிகளும் பாதிக்கப்பட்டோரும்தான். ஆனால், நீதவான்களைக் காட்டிக் கொடுப்பதை விடவும், பாவிகளைக் காட்டிக்கொடுப்பதற்கு 'அசாத்திய துணிவு' தேவைப்படும் கலியுக காலமிது. அந்தத் துணிவை, மனுக்குலத்தின் மீட்புக்காக தன்னையே வருத்தி ஆகுதியாக்கி சிலுவையில் மரித்திருக்கும் இறைமகன் இயேசு அநுர அரசாங்கத்துக்கு வழங்கட்டும்.நாளைய சூரிய உதயத்தின்போது, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகளின் முகத்திரை கிழித்தெறியப்பட்டிருக்குமானால், அது ஒட்டுமொத்தத் தேசமும் கொண்டாடித் தீர்க்கும் உயிர்ப்பின் பெருவிழாவாகவே அமையும்.




# கடந்தகால குற்றங்களின் பின்னணியில் அரசியல்!

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.19

பிள்ளையான் கைதுசெய்யப்பட்டவுடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் ஏன் கலக்கமடையவேண்டும்? பல குற்றங்களின் பின்னணியில் அரசியல் உள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தோல்வியடைந்த அரசியல் கட்டமைப்பைப் புறக்கணித்து நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி தலைமையில் பலமான அரச கட்டமைப்பை உருவாக்கினார்கள். ஊழல், மோசடிகளுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில், மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் அனைவரும் தற்போது ஒன்றிணைந்துள்ளார்கள். உதய கம்மன்பில கடந்த காலங்களில் சிங்கள பௌத்தவாதம், இனவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியே அரசியல் செய்தார். அத்தகையவர் பிள்ளையான் தேசிய வீரன் என்று தற்போது புகழ் பாடுகிறார்.

கடந்த காலக் குற்றங்களின் பின்னணியில் அரசியல் பின்னணிகள் பல உள்ளன-என்றார். (எ-இ)

# கடனட்டை பாவனை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 19

இலங்கையில் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கடன் அட்டைகளின் பாவனை அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 2 இலட்சத்து 018,996 ஆக இருந்த கடன் அட்டைகளின் பயன்பாடு பெப்ரவரி மாதம் 2 இலட்சத்து 020,766 ஆக அதிகரித்துள்ளது.

இது 0.1 சதவீத அதிகரிப்பாகும். அத்துடன் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் பாவனையிலுள்ள கடன் அட்டைகள் 0.6 சதவீதம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)





# துப்பாக்கிச்சூடு ஒருவர் காயம்

கொழும்பு, ஏப். 19

அஹுங்கல்லவிலுள்ள பாடசாலைக்கு முன்னால்நேற்று துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் பதிவாகியுள்ளது.

அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு முச்சக்கரவண்டியில் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபர் பலபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# யாழ்ப்பாணத்தில் வெப்பம் உக்கிரம்

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலையானது தற்போதைய நாள்களில் எச்சரிக்கை மட்டத்துக்கு அதிகரித்துவருகின்றது என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் சூரியராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று வெப்பநிலையானது 34.2 பாகை செல்சியஸ் ஸாகப் பதிவாகியிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# அஞ்சல் வாக்குச்சீட்டுகள் 415,937 விநியோகம்!


உள்ளூராட்சிமன்றங்களுக்கான அதிகாரசபைகள் தேர்தலுக்காக, ஏப்ரல் 7, 10 மற்றும் 15 ஆம் திகதிகளில் 4 இலட்சத்து 15 ஆயிரத்து 937 அஞ்சல் வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் 20 ஆம் திகதி 112 உள்ளூராட்சிமன்றங்களுக்காக 2 இலட்சத்து 32 ஆயிரத்து 558 அஞ்சல் வாக்குச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



நாளை
ஞாயிற்றுக்கிழமை -சித்திரை 07
20.04.2025
சுப நேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருந்தெருவை சீரமைத்துத் தாருங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.19

கரைதுறைப்பற்றுப் பிரதேசசபையின் கீழுள்ள பெருந்தெரு மிகவும் மோசமாகச் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி கரைத்துறைப்பற்றுப் பிரதேசசபையினால் கேள்வி கோரப்பட்டு 5.932 மில்லியன் பெறுமானமுடைய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு 6 மாதங்கள் கடந்தும் இதுவரை குறித்த வீதி சீரமைக்கப்படவில்லை என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர். (ச-இ)

## பிரதமர் கூட்டத்தில் தேர்தல் விதிமீறல்

# ஆணைக்குழு விசாரணைக்கு பாதுகாப்புத்தரப்பு இடையூறு

**யாழ்ப்பாணம், ஏப்.19**

**காரைநகரில் பிரதமர் பங்கேற்புடன் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின்போது விதிமீறல் இடம்பெற்றுள்ளதாக அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய தேர்தல் திணைக்கள அதிகாரிகள் விசாரணை செய்யச் சென்றபோது பாதுகாப்புக் கெடுபிடிகள் விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் தேர்தல் திணைக்கள முறைப்பாட்டுப்பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி தெரிவிக்கையில்,

காரைநகர் கதிர்காமசுவாமி ஆலய முன்றலில் பிரதமரின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது ஆலய வளாகத்தில் குறித்த கூட்டத்தை நடத்தியதாக தேர்தல் திணைக்களத்துக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய குறித்த பகுதிக்கு ஆணைக்குழுவின் முறைப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்தச்சென்ற போது விசேட அதிரடிப் படையினரால் தடுக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளின் பின்னரே விடுவிக்கபட்டனர்.

தேர்தல் காலங்களில் தேர்தல் திணைக்களத்தினர் சுயாதீனமாக இயங்க அனுமதிக்கவேண்டும். குறித்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளருக்கு நாம் முறைப்பாட்டினை கொடுத்துள்ளோம் - என்றார். (ச-125)

# கஞ்சாவுடன் இருவர் யாழ்ப்பாணத்தில் கைது



யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாணம் தட்டாதெரு சந்தியில் வைத்து இரண்டு இளைஞர்கள் கஞ்சாவுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 52 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-27-23)

## உதைபந்தாட்டம்

# வெற்றிக்கிண்ணத்தை வென்றது உதயசூரியன்

முல்லைத்தீவு.ஏப்.19

முல்லைத்தீவு உதைபந்தாட்டச் சம்மேளத்தின் ஏற்பாட்டில் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட விலகல் முறையிலான தமிழ்ப் புத்தாண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினர் வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டனர். போட்டியானது வற்றாப்பளை, செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

குறித்த போட்டியில் இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியினரும், வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினரும் மோதிய நிலையில் போட்டியின் இறுதிவரை இருஅணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில், தொடர்ந்து வழங்கப்பட்ட தண்ட உதை மூலம் 5-4 என்ற கோல் கணக்கில் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கியது.

இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக வீரர் டயான்சன் தெரிவுசெய்யப்பட்டார். தொடர்ஆட்டநாயகனாக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக் கழக வீரர் சி.இன்சாத் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த கோல் காப்பாளராக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக வீரர் பு.அஜித் தெரிவுசெய்யப்பட்டார். மக்கள் மனம்கவர் வீரராக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக வீரர் பு.அபிசன் தெரிவுசெய்யப்பட்டார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார். (ச-246)




# மென்பந்துச் சுற்றுப்போட்டி சுழிபுரம் றைனோஸ் வாகை

யாழ்ப்பாணம், ஏப்.19

5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 'ஏஏ ஸ்போர்ட்ஸ்' நடத்திய நாடளாவிய மென்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் சுழிபுரம் றைனோஸ் வெற்றியைத் தனதாக்கியுள்ளது.

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட இந்த மென்பந்துச் சுற்றுப் போட்டியில் 48 அணிகள் பங்குபற்றின.

இறுதிப் போட்டியில் சுழிபுரம் றைனோஸ் அணியும் பற்றிக் கிளாடியேட்டர்ஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றிக் கிளாடியேட்டர்ஸ் அணியினர் 5 பந்துப் பரிமாற்றங்களில் 47 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பதிலுக்குத் துடுப்பாடிய சுழிபுரம் றைனோஸ் அணியினர் 4.3 பந்துப் பரிமாற்றங்களில் 48 ஓட்டங்களைப் பெற்றுச் சம்பயினைத் தனதாக்கினர். இறுதிபோட்டியின் ஆட்டநாயகனாக கஜன் தெரிவுசெய்யப்பட்டார். (ச-125)

# குருதிக்கொடை



யாழ்ப்பாணம், ஏப்.19

கரும்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம் நடத்தும் 26 ஆவது இரத்ததானமுகாம், கருகம்பனை கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை 9 மணி தொடக்கம் 3 மணி வரை இடம்பெறவுள்ளது. (ச-33)

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் நாதநர்த்தன வர்ணம் நிகழ்வு

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் நாதநர்த்தன வர்ணம் 07 நிகழ்வு, தென்மராட்சிக் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் தலைமையில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் கடந்த புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது வலய மட்ட மாகாண மட்ட தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுபாதினி சத்தியேந்திரம்பிள்ளை கலந்துகொண்டார். (ச-33-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், ஏப் .19

யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் நயினாதீவு பிரதேச மருத்துவமனையில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மதியம் 2 மணி வரை விசேட மருத்துவ முகாமொன்று நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண மருத்துவர்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ள மருத்துவ முகாமில் விசேட மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். இலவசமாக நடைபெறவுள்ள மருத்துவமுகாமில் நயினாதீவு பிரதேச மக்கள் கலந்துகொண்டு பயன்பெறமுடியும் என்று யாழ்ப்பாண மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது. (ச-26)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள் வழங்கிவைப்பு

மன்னார்,ஏப் .19

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் மன்னாரில் உதவித்திட்டங்கள் கடந்த புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

மன்னார் பெரியமடு, காயா நகர்க் கிராமங்களில் வாழ்வாதார உதவியாக விவசாயச் செய்கைக்காக இரு குடும்பங்கள் பயன்படுத்துவதற்காக ஒரு இலட்சம் ரூபா நிதிச்செலவில் ஆழ்துளையிடும் கிணறு அமைத்துக்கொடுக்கப்பட்டது.

மன்னார் வட்டக்கண்டல் குருவில் கிராமத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளியின் குடும்பத்தின் மருத்துவச்செலவுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியும், அத்தியாவசியமான உலர் உணவுப் பொதியும், மன்னார் வங்காலை நறுவிலிக்குளம் கிராமத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றின் மருத்துவச் செலவுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியும் அத்தியாவசியமான உலர் உணவுப் பொதியும், மன்னார் மடு பெரியமுறிப்புக் கிராமத்தில் இதயநோயால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றின் மருத்துவச் செலவுக்காக 25 ஆயிரம் ரூபா நிதியும், அத்தியாவசியமான உலர் உணவுப்பொதியும் வழங்கிவைக்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இந்த உதவிகளை வழங்கிவைத்தார். (ச-41-66)

# கௌரவிப்பும் கண்காட்சியும்


யாழ்ப்பாணம், ஏப். 19

சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் கண்காட்சியும் மூளாய் அபிவிருத்தி அமையத்தின் தலைமைக்காரியாலயத்துக்கு முன்பாக உள்ள சிட்டி ஹோலில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது மூளாய்,பொன்னாலை கிராமங்களில் 2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், 'சோட்டோகான் கராத்தே' போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டி சர்வதேச போட்டிக்குத் தெரிவான மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொடர்ந்து மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தின் முதலாவது தையல் பயிற்சிநெறியினை நிறைவு செய்த மாணவர்களினால் உருவாக்கப்பட்ட தையல் பொருள்களின் கண்காட்சி இடம்பெறவுள்ளது. (ச-25,125)





பெரியவெள்ளி பூசை வழிபாடுகள் மற்றும் சிலுவைப்பாதை வழிபாடுகள் கிளிநொச்சி புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் புனித திரேசாள் ஆலயங்களில் சிறப்பாக இடம்பெற்றன. (ச-25,113)

# விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பலன்கள் - 2025






## புதுவாய்ப்புகள் கதவைத்தட்டும்

**சிம்ம ராசிக்காரர்களுக்கு,**

எங்கும், எதிலும் புதுமையை விரும்பும் நீங்கள், எல்லாவற்றிலும் வெற்றியே காண்பவர்கள். உங்கள் ராசிக்கு 3 ஆவது ராசியில் சந்திரன் நிற்கும்போது விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் மனதில் உற்சாகம் பொங்கும். புது முடிவுகளை எடுத்து சுற்றியிருப்பவர்களை ஆச்சரியப்படுத்துவீர்கள்.

குருபகவான் லாப ஸ்தானத்துக்குள் வருவதால் வராமலிருந்த பணமெல்லாம் இனி தடையின்றி வரும். பொன், பொருள் சேரும். வீட்டுக்குத் தேவையான நவீன எலக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக்ஸ் சாதனங்களை வாங்குவீர்கள்.

குடும்பத்தில் உங்களை அலட்சியமாக பார்த்தநிலை மாறும். சந்தோஷம் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்கள் இனி உறுதுணையாக இருப்பார்கள். மூத்த சகோதரர்கள் உதவுவார்கள். மே 18ஆம் திகதி நிகழப் போகும் ராகு கேது பெயர்ச்சி உங்களுக்கு சாதகமாகவே அமையும். சமயோசித பேச்சால் சாதிப்பீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நீங்கி உற்சாகம் பெருகும். புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். அண்டை அயலாருடன் அதிகம் நெருக்கம் காட்டவேண்டாம். குடும்ப விஷயங்களை வெளியில் சொல்லிக்கொண்டிருக்காதீர்கள். யாரையும் விமர்சனம் செய்யவேண்டாம். அவ்வப்போதுவரும் எதிர்மறை எண்ணங்களைத் தவிர்க்கப்பாருங்கள். முடிந்தவரை இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**இல்லத்தரசிகளுக்கு:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். குடும்பத்தினர் அனைவரும் உங்களிடம் ஆலோசனை கேட்பார்கள். பிள்ளைகளின் உயர்கல்வி மற்றும் அவர்களின் கல்யாணத்தைப் பற்றி அவ்வப்போது கவலைப்படுவீர்கள். என்றாலும் நல்லதே நடக்கும்.

**மாணவமாணவிகளுக்கு:** புதிய சிந்தனைகள் பிறக்கும். பெற்றோர், ஆசிரியர் என அனைவரிடமும் அன்பை பெறுவார்கள். கொஞ்சம் தூக்கத்தைத் தவிர்த்துப் படிப்பில் அக்கறை காட்டுங்கள்.

**வியாபாரிகளுக்கு:** போட்டிகள் இருக்கத்தான் செய்யும். பழைய பாக்கிகளை அலைந்து திரிந்துதான் வசூலிக்க நேரிடும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

**உத்தியோகர்களுக்கு:** திடீர் முன்னேற்றம் உண்டாகும். நேரம் காலம் பார்க்காமல் உழைத்ததற்கு பலன் கிடைக்கும். இனி எதிர்பார்த்தபடி சம்பள உயர்வு, பதவி உயர்வு உண்டு. சக ஊழியர்களும் நெருங்கிவந்து பேசுவார்கள். கலைத்துறையினருக்கு புது வாய்ப்புகள் தேடி வரும். வீண் வதந்திகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**மொத்தத்தில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு சில சிரமங்களைக் கொடுத்தாலும் பலவிதங்களிலும் முன்னேற்றத்தை தேடித் தருவதாக அமையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காரைநகர் பிரதேசசபையால் கடந்த புதன்கிழமை நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் திட்டத்தின் கீழ் 9 மீனவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வலை மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச)

# அநுர அரசாங்கம் மக்களுக்குச் சுமையல்ல

## பிரதமர் ஹரிணி பெருமிதம்

கொழும்பு, ஏப். 19
கடந்த அரசாங்கங்களைப் போன்று அல்லாமல், மக்களுக்கு எவ்விதத்திலும் சுமை இல்லாமல் தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்று பிரதமர் ஹரிணி கூறியுள்ளார்.

கொலன்னாவையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையிலேயே பிரதமர் ஹரிணி இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த ஆறு மாதங்களில் நீங்கள் நியமித்த அரசாங்கத்தையும், நீங்கள் எதிர்பார்த்த மாற்றத்தையும் பற்றி சுருக்கமான மீளாய்வொன்றைச் செய்ய இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவது நல்லது என்று நினைத்தேன். 6 மாதங்கள் என்பது குறிப்பிட்ட ஒரு காலம். ஒரு பெரிய மாற்றத்தை எதிர்பார்த்து, இந்த மாற்றத்தை ஏற்படுத்த நாங்கள் ஒன்றிணைந்தோம்.

நாட்டைப் பொறுப்பேற்றபோது நாடு எங்கிருந்தது, எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த நாட்டின் நிலைமையை முழுமையாகப் புரிந்துகொண்டு, அந்தப் பழைய அரசியல் கலாசாரத்துக்குள் இந்த நாடு முன்னேற எந்த வழியும் இல்லை என்ற முடிவோடுதான் நீங்கள் எங்களை நியமித்தீர்கள்.

அந்த விடயங்களில், நாட்டில் நாம் முன்னுரிமை அளிக்கவேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. நாம் எல்லாவற்றையும் கட்டியெழுப்ப வேண்டும், சரிசெய்ய வேண்டும், கட்டமைக்க வேண்டும், சரியான பாதையில் கொண்டுசெல்ல வேண்டும். அந்த ஆயிரம் விடயங்களில், நாம் முன்னுரிமை அளிக்கவேண்டிய பல பகுதிகளும் பிரச்சினைகளும் உள்ளன. முதலில் செய்ய வேண்டிய சில விடயங்களைச் செய்யாமல் விட்டுவிட்டு நாம் எதுவும் செய்ய முடியாது. முக்கிய விடயம் பொருளாதார உறுதித்தன்மையை ஏற்படுத்துவதாகும்.

இந்த ஆண்டு இலங்கைக்கு மூன்று மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுவருவதே எங்கள் இலக்கு. முதலீட்டாளர்கள் இப்போது வரத் தொடங்கியுள்ளனர். பல்வேறு திட்டங்கள் இப்போது நாட்டுக்கு வரத் தொடங்கியுள்ளன. கடந்த அரசுகளைப் போன்று மக்களுக்குச் சுமையாக நாங்கள் இலுக்கவில்லை. இதை 100 வீதம் என்னால் உறுதிப்படுத்த முடியும் என்றார். (ம-இ)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | முடிவு |
|---|---|
| 04 + 09 + 1934 | 18 + 04 + 2025 |

### செல்வலிங்கம் கமலாம்பிகை

(ஓய்வுநிலை சங்கீத ஆசிரியை,சங்கீத பூசணம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கட்டைப்பிராய் யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வலிங்கம் கமலாம்பிகை(ஓய்வுநிலை சங்கீத ஆசிரியை.சங்கீத பூசணம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) 18/4/2025 நேற்று வெள்ளிக்கிழமை ஈசனது பாதாரவிந்தங்களைப் பற்றிக் கொண்டார்.

அன்னார், நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய ஆதீன பரம்பரை தர்மகர்த்தாவாகிய அமரர் உயர்திரு பரமலிங்கம் கந்தசாமி, மற்றும் நயினை வரகவி நாகமணிப்புலவரின் சிரேஷ்ட புதல்வி அமரர் நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மகளாரும், காலஞ்சென்ற திரு/திருமதி செல்லையா தவசிப்பிள்ளை தம்பதியரின்(அளவெட்டி) அன்பு மருமகளும், அமரர் கும்பிளாவளை செல்வலிங்கத்தின் பாசமிகு மனைவியும்,திருவருட்செல்வன்(பிரதி நிதியாளர் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்.கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு).அனிந்திதை(ஆசிரியை.யா/செங்குந்தா இந்துக் கல்லூரி),பதஞ்சலி(பாபு)(ஜேர்மனி)ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானசம்பந்தன் (ஓய்வுநிலை அதிபர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம் சாரணர் மாவட்ட உதவி மாவட்ட ஆணையாளர்).ஜீவபூரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை,மட்டக்களப்பு).கலைமகள்(தாதிய உத்தியோகத்தர் ஜேர்மனி)ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சங்கீர்த்தனன்.சாம்பவி.யாதவன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், நர்த்தனா.மாதுரி.கோகீரன்.சாதனா.மயூரி.லயகரி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், காலம்சென்றவர்களான மகேஸ்வரி, கனகசபாபதி (ஆசிரியர் பரம்பரை அறங்காவலர் சபை உறுப்பினர், நாகபூசணி அம்பாள் ஆலயம் நயினாதீவு), குகதாசன் (வட்டார கல்வி அதிகாரி), காமாட்சிசுந்தரம் (அதிபர்), சவுந்தரம், பராசக்தி, மகாலிங்கம் (பிரதம எழுதுவினைஞர்), கனகாம்பிகை, கண்ணன், இராசரெத்தினம் (பிரதம சுங்க அதிகாரி), மற்றும் லலிதாம்பாள் (ஆசிரியை), பரமலிங்கம் (முன்னாள் செயலாளர் வடகிழக்கு மாகாண பொதுநிர்வாக ஆணைக்குழு, தலைவர் அறங்காவலர் சபை, நாகபூசணி அம்பாள் ஆலயம், நயினாதீவு), காலஞ்சென்றவர்களான மகாதேவா (ஓய்வுநிலை தபாலதிபர்),ஞானசுந்தரம் (அதிபர்) மற்றும் வைத்திய கலாநிதி நவரட்ணராஜா(வைத்தியப் பணிப்பாளர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலம்சென்ற குமாரவேலு, மற்றும் கோகிலாம்பாள், காலம்சென்ற பார்வதி, கனகம்மா, கணபதிப்பிள்ளை, பாலசுந்தரம், நீலாம்பிகை, மற்றும் புவனேஸ்வரி, மற்றும் நாகேஸ்வரி, காலம்சென்ற கணேசு, மற்றும் கமலாதேவி.புவனேஸ்வரி.காலம்சென்ற சாந்தினி, மங்களேஸ்வரி, மற்றும் கலாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ் சென்றவர்களான கமலாசினிதேவி,அருந்ததிதேவி, திலகரத்தினம்.வாசுகிதேவி, தில்லைக்கோன், யசோதராதேவி மற்றும் அப்பமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், (மகாலிங்கம் நீலாம்பிகை, புவனேஸ்வரி), (பரஞ்சோதி தவமணி) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்

அமரரின் இறுதிக்கிரியைகள் 20/4/2025 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்று, முற்பகல் 9.00 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏறுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

604/6,கலைமணி ஒழுங்கை,
கட்டப்பிராய்(3ம் கட...
கல்யாண மண்டப ...



# யாழ்.மாவட்டச் செயலகத்தில் கைவிசேடம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 19
தமிழ் சிங்களப் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு, யாழ்.மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுக்குக் கைவிசேடம் வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில், மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு கைவிசேடம் பெற்றுக்கொண்டனர். (ச-25,66)



இராமநாதன் கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற வட மாகாண சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில், பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்த கங்கைத் தமிழகக் கலாமன்றக் கலைஞர்களுடைய “கிராமியக் கதம்பம்” நிகழ்வு மேடையேற்றப்பட்டது . (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

உசன் கஜகேணி பிள்ளையார் கோவில் வீதி, தொந்தியா வேட்டையில் பயன்பதரும் தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்கு உண்டு.

(CR/0066) J-1

**076 072 0341**

## மணமகன்கள் தேவை

1985-2003 மணமகள்களுக்கு வெளிநாட்டு மணமகன்கள் தேவை

சசி திருமண சேவை , யாழ்

தொடர்பு: **077 044 3589**

## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | - Rs 3000.00 |
| மேசன் உதவியாளர் | - Rs 2500.00 |
| வெல்டர் | - Rs 3000.00 |
| சாரதி (Heavy Vechicle) | - Rs 3000.00 |

தேவைப்படின் தங்குமிடம். உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு:- **077 724 5399**

(காலை 8.00 - மாலை 5.30 வலை) யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு உணவு தயாரிப்பாளர் (cook) தேவை

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இலவசம்)

☎ **071 116 9648**


# பொற்கலைச்சங்கமம் முதல்நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப் .19

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், 'வேரிலிருந்து விழுதுவரை' பொற்கலைச்சங்கமம் விழா யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை மூன்று நாள்களும் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வு ச.மார்க்கண்டுவின் "பொற்கலை" மலர் வெளியீடும் மதிப்பளிப்பும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் விருந்தினர்களாக மலேசியா மொனாஷ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பா.பாலச்சந்திரன், யாழ்.பல்கலைக்கழக மனிதப் பண்பியற்பீட முதற் பீடாதிபதி கா.இந்திரபாலா ஆகியோர் கலந்துகொள்வர். நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி ஆற்றுவார். பி.எஸ்.ஆர் சாகித்தியன் இசைக் குழுவினரின் மங்கல இசை விருந்தும், நர்த்தன ஷேத்ரா மாணவர்களின் நிருத்த அலங்காரம் மற்றும் "உறவாடும் உயிரே" நாட்டிய நாடகம் ஆகியன இடம்பெறவுள்ளன. (ச-25)


## பணிப்பெண் தேவை

கொழும்பில் தமிழ் குடும்பத்துடன் தங்கி நின்று பணிபுரிய பண்பான பணிப்பெண் தேவை.

(CS/68011) J-1

**077 858 1486**

YMCA JAFFNA ESTD : 1890

**YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION - JAFFNA**

வாலிப கிறிஸ்தவ சங்கம் තරුණ ක්‍රිස්තියානි සංගමය - යාපනය

## VACANCY AT YMCA JAFFNA

Post: Liaison Officer, Male (Programme Co-ordinator).

Salary: Rs.25,150/-, COL Rs.7,800/- and other incentives.

Requirements:

- Proficiency in English (both written and spoken)
- Excellent interpersonal relationship skills.
- Competence in MS Office
- Willing to work long hours.
- Age: Between 22 - 35 years.

To Apply: Please submit your updated Curriculum Vitae to the General Secretary, YMCA, 109 Kandy Road, Jaffna, on or before 26th April 2025.

General Secretary
YMCA Jaffna,
109, Kandy Road, Jaffna


## 31ம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்

திருமதி கஜர்சனா நிஷாத் அவர்களின் மாமியார்

**கனகராசா கமலாவதி**

அவர்கள் கடந்த 20.03.2025 அன்று சிவபதமடைந்தார். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

தோற்றம் 07.04.1951 மறைவு 20.03.2025

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்

திருமதி தர்ஷினி கிருசாந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா விக்னராஜா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

தோற்றம் 28.04.1948 மறைவு 10.04.2025

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 03 . 1950



மறைவு 16 . 04 . 2025

**சீனியர் பாலசுப்பிரமணியம்**

சிவபூதவராயர் கோயில் பன்னாலையை பிறப்பிடமாகவும் கிளானை கொல்லன் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் பாலசுப்பிரமணியம் அவர்கள் 16.04.2025 புதன்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் , சின்னத்துரை கதிரமலை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் , விமலாதேவி (கிச்சி) அவர்களின் அன்புக் கணவரும் , தர்ஜினி (தர்ஷா) (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் PDB ) கிருஷ்ணகாந்தன் (கிருஷ்ணா- பிரான்ஸ), அன்பினி (அன்பு - எழுதுனர் MPCS - Jaffna) அகியோரின் பாசமிகு தந்தையும் , மலர்விழி (மலர்-பிரான்ஸ்), சாந்தகுமார் (கண்ணன்) ஆகியோரின் மாமனாரும் , ரம்ஜவர்ஷினி (சது-மாணவி-மகாஜனக்கல்லூரி), கிருசலன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற முருகையா, தங்கரத்தினம் (பாக்கியம்), கனகராசா, செல்வராசா (சிவபெருமான்), இராசாத்தி (தேவி) அகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அம்பிகாதேவி (தேவி) நாகேஸ்வரி (குஞ்சா), வியாகேசன் (பிள்ளையார்),காங்கேசன் (சின்னாம்பி), குகதாசன் (ரவி) மற்றும் ரதிதேவி (வெள்ளையம்மா) பிரமளாதேவி (பிள்ளை-லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கீரிமலை செம்பொண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
**குடும்பத்தினர்**
தர்ஷா மகள் 076 791 2370
கிஸ்ணா மகன் 076 538 9558

'கதிரைமலை வாசா'
கிளானை,
கொல்லங்கலட்டி.

(CS/0062) S-1

## 17ம் ஆண்டு நினைவஞ்சலி

ஈர விழிகளுடன் வதங்கிய
இதயத்திலிருந்து சொரியும் கண்ணீர் பூக்கள்

அன்னையின் மடியில் 27 . 06 . 2003



பிரமத்தின் அரவணைப்பில் 19 . 04 . 2008

**அமரர் இந்துஜா விஜயகுமார்**

அன்பின் ஊற்றே
அழகின் பிறப்பிடமே
மகளே இந்துஜா
எம்மை விட்டு நீ அகன்று
17 வருடங்கள் கடந்தபோதும்
என்றும் உன் நினைவுடன்
நடைப்பிணமாய்
அலைகின்றோம்
அமைதி கொள்வாய் மகளே

அம்மா, அப்பா,
அன்புத் தம்பி (இந்துஜன்),
மற்றும் குடும்பத்தினர்.

# பல்கலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.19

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் நியூசிலாந்து வன்னிநேயம் அமைப்பின் நிதிப் பங்களிப்புடன், பல்கலைகழகத்தில் கல்வி கற்கும் பொருளாதாரம் பின்தங்கிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தகுதியுடைய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு தலா ஒரு இலட்சத்து 25,000 ரூபா பெறுமதியான புலமைப்பரிசில் வழங்கப்படும். மேலதிகவிவரங்களை 0706417659 அல்லது 0760389828 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு விழா

51 ஆவது காலாட் படைகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தமிழ் - சிங்களப் புத்தாண்டு சிறப்பு நிகழ்வுகள் எதிர்வரும் 6 ஆம்திகதிமு.ப.8மணி தொடக்கம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், தலையணைச் சண்டை, சறுக்குமரம் ஏறுதல், முட்டி உடைத்தல், அழகுராணிப்போட்டி, கயிறு இழுத்தல், ஓலை பின்னுதல், கோலம்போடுதல், வினோத உடைப் போட்டி உள்ளிட்ட விளையாட்டுகள் இடம்பெறவுள்ளன. வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
29 . 09 . 1941



மறைவு
20 . 03 . 2025

கடந்த 20-3-2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி

### அமரர் நடராசா பாக்கியம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (19-4-2025) சனிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிராத்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கெள்ளவும்.**

அன்னாரின் மரணச்செய்தியைக் கேட்டு நாம் துயருற்று இருந்தவேளையில் நேரில்வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மலர்மாலை சாத்தியவர்க்கும் உற்றார் , உறவினர் , நண்பர்கள் மற்றும் இன்று வரை நமக்கு சகல உதவிகளையும் வழங்கிய அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் ,
சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி .

குடும்பத்தினர்
077 430 8120



## யாழில் 2 வருடங்களில் விபத்தில் 81 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் விபத்துக்களில் சிக்கி 81 பேர் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைவாகவே இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக 1991 பேர் விபத்துக்கள் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

(ம-125)


## தசாக கிருஹயக்ஞக அழைப்பு



கடந்த (11.04.2025) வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் இரத்தினேஸ்வரக் குருக்கள்

திதி: பூர்வபக்ஷ சதுர்த்தசி

அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

- 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை தசாகம் காலை 10.00 மணி
- 21.04.2025 திங்கட்கிழமை ஏகோதிஷ்டம். மாசிகம்
- 22.04.2025 செவ்வாய்க்கிழமை சபிண்டீகரணம்
- 23.04.2025 புதன்கிழமை கிருஹயக்ஞம் (சமாராதனை)

அன்னாரின் ஆத்மசாந்தி கிரியைகளில் கலந்துகொண்டு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்

(CS/58014) J-1

குடும்பத்தினர்.
071 236 2855, 021 221 3851



## மரண அறிவித்தல்



தோற்றம் 25.09.1948 மறைவு 15.04.2025

### புஸ்பலீலாவதி கந்தசாமி (ராசாத்தி)

கைதடி கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பலீலாவதி கந்தசாமி அவர்கள் கடந்த 15 .04 .2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா கந்தசாமி ( ஓய்வு நிலை பதிவாளர் யாழ் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை JP (முன்னாள் உரிமையாளர் - லீலாவதி ஸ்ரோர்ஸ் கைதடிச்சந்தி) - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான மீசாலையைச் சேர்ந்த பொன்னையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், உஷாமினி ( கனடா), மயூரன் (UK), சசிகலா( கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருவாரூரன்( கனடா), கிருசாந்தினி (UK), ரமேஸ் ( கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், புஸ்பராசா, காலஞ்சென்ற புஸ்பராணி, மற்றும் புஸ்பராஜேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பவதி, மற்றும் புஸ்பரதி, புஸ்பமலர், ஆகியோரின் அன்பு சகோதரியும் சுரேக்கா, கனிஸ்கா, அக்சரி,ஷஸ்வின், விதுசன், பவிதன் ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.4.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் கைதடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்: குடும்பத்தினர்
071 436 3253

கைதடி கிழக்கு

(CS/58006 S-1



## மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 03 . 1955



மறைவு
18 . 04 . 2025

### சுவாமிநாதன் சற்குணநாதன்

(ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர்)

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் சற்குணநாதன் அவர்கள் நேற்று (18.04.2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதன் - பொன்னாச்சி (சரசு) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், சங்கரப்பிள்ளை - பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், கிருபராணியின் அன்புக் கணவரும், சஞ்சீவன் (இங்கிலாந்து), சாகீசன் (NDB Manager) ஆகியோரின் அன்புத் தந்தையும், குகநாதன் (கனடா), சகுந்தலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நிஷாந்தினியின் (இலண்டன்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உசன்,
மிருசுவில்.

(CR/0069) J-1

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** பிள்ளைகள் வழியில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும். மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே இருக்கும்.

**இடபம்:** காலையில் சற்றுச்சோர்வாக இருக்கும். பிற்பகலுக்குமேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தாயின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு உகந்தநாள். கணவன் மனைவிக்கிடை யே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன் யம் அதிகரிக்கும்.

**கடகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராதசெலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டிவரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்குவாய்ப்பு உண்டு. உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அதன் காரணமாக கையிருப்புக்கரைவதுடன் சிலருக்குக் கடன்வாங்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். வாழ்க்கைத்துணைமூலம் எதிர்பார்த்த காரியம் முடிவது மகிழ்ச்சிதரும். நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித்தருவீர்கள். பிற்பகலுக்கு மேல் அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** இன்று எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் தாய்வழி உறவினர்கள் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**கும்பம்:** எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். திடீர்ச் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையே மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது.

## டெங்கு...

துள்ளது. இது தொடர்பில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்ததாவது:-

இலங்கையில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது. இந்த வருடத்தில் இதுவரை 14 ஆயிரத்து 678 பேர் டெங்குத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர். கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலேயே அதிகளவான தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். நாட்டில் பரவலாக டெங்குத் தடுப்புச் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

## டிப்பர்...

ஒன்றரை வயதுக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தை, குழந்தையின் தந்தை செலுத்தியபோது அந்தக் குழந்தை டிப்பர் சில்லுக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளது.

சம்பவ இடத்தைச் சென்று பார்வையிட்ட கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் எஸ்.சிவபாலசுப்ரமணியம் உடற்கூற்று விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (அ-ம-214-113)

## காட்டு...

வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வேலங்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மடுக்குளம், கோவில்மோட்டை, செங்கற்படை, சின்னத் தம்பனை சிவநகர், குஞ்சுக்குளம், கோவில் புளியங்குளம் போன்ற கிராமங்களிலேயே காட்டு யானைகளின் அத்துமீறல் அதிகரித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பலமுறை அரச அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டிய போதிலும் இதுவரை எந்தப் பயனும் இல்லை. பயிர்கள், பயன்மரு மரங்கள் அழிக்கப்படுவது ஒருபுறம் இருக்கையில், ஒவ்வொரு நாளும் அச்சப்படும் நிலையில் வாழவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது - என்றனர். (அ-ம-25-110)

## பிள்ளையானின்...

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிர மணியம் ரவீந்திரநாத் கடந்த 2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் நிலையிலேயே பிள்ளையானின் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட பிள்ளையானின் சாரதி, தற்போது கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-இ)

## ஈஸ்டர்...

களாக அறிவிக்குமாறு, கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான தலைவர் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகமான வத்திக்கானிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவரின் கோரிக்கையை வத்திக்கான் ஏற்றுக் கொண்ட நிலையிலேயே, உயிர்த்தஞாயிறுத் தாக்குதலில் இறந்தோர் அனைவரும் நாளைமறுதினம் வேதசாட்சிகளாக அறிவிக்கப்படவுள்ளனர்.

கட்டுவாப்பிட்டி சென். செபஸ்ரியன் தேவால யத்தில் வைத்து கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த அறிவிப்பை விடுக்கவுள்ளார். வத்திக்கானின் நேரடிப் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன என்று கருதப்படுகின்றது. (அ-ம-6)

## பிள்ளையான்...

சந்திப்பில் சரத் வீரசேகர கூறியதாவது:-

பிள்ளையான் புலிகள் அமைப்பில் இருந்து விலகி, ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இணைந்தமையானது போரை முடிப்பதற்கு ஓரளவு பங்களிப்பாக அமைந்தது. அதை மட்டுமே எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியும். அதற்காக அவரை 'தேசிய நாயகன்' என்று கூறமுடியாது. அதேபோல், பிள்ளையானுக்காக கம்மன்பில சட்டத்தரணியாக முன்னிலையாகியுள்ளமை கம்மன்பிலவின் தனிப்பட்ட விடயம். அதில் நாங்கள் எந்தத் தவறையும் காணவில்லை - என்றார். (அ-ம-44)

## இந்தியாவுக்குப்...

வுக்குத் தெரியப்படுத்திவிட்டதாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைக்கான அண்மைய பயணத்தின்போது, இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மோடி பிரஸ்தாபித்தார். எனினும், இலங்கையின் நிகழ்ச்சிநிரலில் அந்த விடயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பாலம் அமைக்கும் திட்டத்தை, ரணில் பிரதமராக இருந்த போது முதன்முதலில் முன்வைத்தார். 2023ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தவேளை இந்தியாவுக்குப் பயணம் செய்தபோதும் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. எனினும், அநுர அரசாங்கம் அந்தத் திட்டத்தில் இருந்து பின்வாங்கியுள்ளமை குறிப்பி டத்தக்கது. (அ-ம-6)

## இலங்கையில்...

இலங்கையில் மீண்டும் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புத்தாண்டு காலப்பகுதியை மையமாக வைத்து எலிக்காய்ச்சல் தொடர்பான புதிய கொத்தணிகள் உருவாகிவருகின்றன. எனவே, புத்தாண்டுக் காலப் பகுதியில் வயல் வெளிகளிலும், வயல்வெளிகளுக்கு அருகிலும் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை மேற்கொண்டவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## அன்னை...

கள் ஒன்றியத்தின் தலைவர் ச.சிவயோகநாதன் உட்படப் பலருக்கு எதிராக இந்தத் தடையுத்தரவுகள் பெறப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் ச.சிவயோகநாதனின் வீட்டுக்குச் சென்ற மட்டக்களப்பு கொக்குவில் பிரதேச பொலிஸார் நீதிமன்ற தடையுத்தரவைக் கையளித்துள்ளனர்.

2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரிவு (1)இன் பிரகாரம், தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மரணித்த உறுப்பினர்களை நினைவுகூருவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுகள் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் என்பதால் நடவடிக்கைகளைத் தடுத்துநிறுத்தும் பொருட்டு மேற்படி தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை, பொது இடங்களில் ஒன்றுகூடுவதையும், ஊர்வலமாகச் செல்வதையும் தவிர்த்து மட்டக்களப்பு, நாவலடியில் உள்ள அன்னை பூபதியின் சமாதி உள்ள இடத்தில் நினைவேந்தல் நடத்துவதில் எந்தத் தடையும் இல்லை என்று நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, நினைவேந்தல் நிகழ்வு தொடர்பான விசாரணைக்கு இன்று காலை காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு ச.சிவயோகநாதனுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது. (அ-எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவில் வீதியில் 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
நல்லூர் சங்கிலியன் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 794 8012

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு



சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீட் கலவையை தாங்கி நிற்கும் ஐக் முட்டுக்கள் (Steel Props) 10.5 Kg எடை கொண்டது இப்பொழுது எம்மிடம்.
இதை விட எடை குறைந்ததும், தரம் குறைந்ததும் சந்தையில் இருப்பதால் உங்கள் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

"நாங்கள் உங்களோடு"

**ஆர்க் . என் . கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57780) J-1


# இலங்கை மீதான குற்றச்சாட்டுகளுக்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்

## வலியுறுத்துகின்றார் கரு ஜயசூரியா

கொழும்பு, ஏப்.19

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேணடும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப செயற்படுவது என்பது நாட்டுக்கு இழைக்கின்ற துரோகமாகாது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் நிறுத்தப்பட் டிருந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை 2017ஆம் ஆண்டு இலங்கைக்கு மீண்டும் வழங்கப்பட்டது. இந்த சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்கு இலங்கை மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சிறந்த ஆட்சியியல் நிர்வாகம் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் தொடர்பான 27 சர்வதேசப் பிரகடனங்களுக்கு அமைவாக இலங்கை செயற்படவேண்டியுள்ளது.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையால் இணங்கப்பட்ட கடப்பாடுகள் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதை மதிப்பீடு செய்வதற்காக இந்தவார இறுதியில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கை வரவுள்ளனர்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள எவ்வித அரசியல் வேறுபாடுகளுமின்றி சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் ஆகிய விடயங்களில் அரசாங்கம் நம்பத்தகுந்த முன்னேற்றத்தைக் காண்பிக்கவேண்டும்.

நிகழ்நிலைக்காப்பு சட்டமும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடும் எதிர்ப்புக்கு உள்ளானது. இந்தச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்கள் இலங்கையின் நன்மதிப்பை மேலும் சிதைத்தன. இவ்வாறான கரிசனைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்போது அரசியல் தன்முனைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன பேணப்படுவது அவசியமாகும்.

தேர்தல் பரப்புரையின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் வாக்குறுதியளிக்கப்பட்டமைக்கு அமைவாக புதிய அரசியலமைப்பொன்று கொண்டுவரப்படும் என வடக்கு, கிழக்கு மக்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றனர். இந்த விடயத்தில் அநேகமான நடவடிக்கைகள் எட்டாவது நாடாளுமன்றத்திலேயே பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. குறுகிய காலத்தில் அடையப்படக்கூடிய விடயங்கள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன. தற்போது அதைத் தொடர்ந்து முன்னெடுப்ப தற்கான திட்டமும், தெளிவான காலவரையறையுமே அவசியமானதாக இருக்கின்றன-என்றார். (எ-இ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23.02.1957 மறைவு 30.04.2024

கடந்த (30.04.2024) செவ்வாய்க்கிழமை அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்ப விளக்கு

**அமரர் சுசீலாதேவி தில்லைராஜன்**

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நாளை (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
குறுக்கு வீதி.

குடும்பத்தினர்.
077 314 9226

(CS/57934) J-1


# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு அடிபணிந்தது தேர்தல் ஆணைக்குழு !

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.19

தேர்தல்கள் ஆணைக்குழு தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்துக்கு அடிபணிந்துவிட்டது என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமது கட்சியின் நிர்வாகத்தின் கீழ் வராத, வேறு கட்சிகளால் வெற்றி கொள்ளப்படும் உள்ளூராட்சி சபைகளுக்கு அபிவிருத்தி நிதி ஒதுக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அநுரகுமார பகிரங்கமாக அச்சுறுத்துகின்றார். ஏனைய கட்சி வேட்பாளர்களைத் திருடர்கள் என்று குற்றஞ்சாட்டுகின்றார். இவையெல்லாம் தேர்தல் விதிகளை மீறும் செயற்பாடுகள். இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்பொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது. ஆனாலும் முறைப்பாடு செய்து 15 நாள்கள் கடந்துள்ள போதும் தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

தேர்தல்கள் ஆணைக்குழு ஆளுங்கட்சிக்கு அடிமையாகியுள்ளது. அதற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் முறைப்பாடு செய்யும்-என்றார். (எ-இ)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் அழகுசாதனப் பொருட்கள் (Cosmetics & Fancy) விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு மேற்படி துறையில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை.

(CS/2978) J-1

தொடர்பு:- 077 122 1289

## காணி விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன் ஆயாக் கடவை, பிள்ளையார் ஆலயத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் நல்ல செம்மண் வளம் உள்ள 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும், பண்ணை அமைப்பதற்கும் ஏற்றது.

தொடர்பு:- 076 419 6358




பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற புனித வியாழன் வழிபாடுகளில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். பேசாலை பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் பேசாலை உதவி பங்குத் தந்தை அருட்பணி பியோ தர்சன் அடிகளாருடன் கூட்டுத்திருப்பலியும் புனித வியாழன் திருச் சடங்கும் நடைபெற்றன. (ச-25,60)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org